# திருக்கோட்டியூர் செல்வநம்பி
# வாழி திருநாமம்

அன்ன வயல் கோட்டி நகர்க்கு அதிபதியோன் வாழியே
ஆவணி சேர் பூசத்தில் அவதரித்தான் வாழியே
வண்ண மலராள் கோனாய் வந்துதித்தான் வாழியே
மறையவர் கோன் பட்டர்பிரான் வாழ்த்துமவன் வாழியே
பன்னு பல நற்கலைகள் பயிலுமவன் வாழியே
பண்புடனே கோட்டி நம்பி பணியுமவன் வாழியே
தென்னவனுக்கு ஆரியனாய்த் தேர்ந்துரைப்போன் வாழியே
செல்வ நம்பி திருவடிகள் சகதலத்தில் வாழியே

---